**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.132/2022**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கணேசன் (PW 6) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026 by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது வெள்ளோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.02.2021ம் தேதி 00.30 மணிக்கு நான் சிவகிரி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருப்பூர் மாவட்டம், தாராபுரம், சங்கராந்தாம்பாளையம், க.எண்.2/105, இரத்தினமூர்த்திகோவிலை சேர்ந்த செந்தில் குமார் மகன் நவீன்குமார் வயது 22, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.42/2021 ச/பி.279, 337இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே 01.45 மணிக்கு கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இவ்வழக்கில் காயம்பட்ட நந்தகுமார் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்று வரப்பெற்ற இறப்பு இண்டிமேசனின் பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவில் இருந்து 279, 304(A) இதசவாக சட்டடப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக கொடுமுடி வட்ட

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.12 15:34:57 +0530

காவல் ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள் வசம் ஒப்புவித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :–**

வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக எப்போது நான் பார்வைக்கு வைத்தேன் என்றால் 14.02.2021ம் தேதி 01.45 மணிக்கு ஆய்வாளர் அவர்கள் வசம் வைத்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.12 15:35:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.